**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.90/2017</u>**

**<u>வழக்கு சாட்சி PW – 5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 10th, 2024.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வல்லத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக பணி செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் நான் செங்கோட்டை காவல் நிலையத்திற்கு அ.சா.1 ஐ காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன். அப்போது, மாலை 4.00 மணியிருக்கும். காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அவர்கள் எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. அக்கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 12.10.2018 ம் தேதி காலை 8.00 மணிக்கு நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த ஜேம்ஸ் என்பவரும் எங்கள் ஊர் நடுத்தெருவைச் சேர்ந்த ஜெயபால் என்பவரின் வீட்டு பக்கம் வரும்போது, அங்கு வந்த செங்கோட்டை போலீசார் சம்பவ இடத்தையும், சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் கூறிக்கொண்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.90/2017</u>**
**<u>வழக்கு சாட்சி PW – 6</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பண்டிட் மோதிலால் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 10th, 2024.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வல்லத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிக்கடையில் வேலை செய்து வருகிறேன். குமார் என்ற பசுபதி குமாரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் நான் வல்லம் சிலுவை முக்கில், நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த அசோக் என்பவரும் மாலை 4.00 மணியளவில் நின்று கொண்டிருந்தோம். அப்போது அங்கிருந்த ஆஜர் எதிரி குமார் என்ற பசுபதி குமாரை போலீசார் கைது செய்தார்கள். ஆஜர் எதிரியை கைது செய்து விசாரித்தார்கள். அப்போது ஆஜர் எதிரி யாரையோ வெட்டி விட்டதாக ஒப்புக்கொண்டார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.3.

அத்தாட்சி உள்ள  கையெழுத்து அ.சா.ஆ.4. இந்த வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் பகுதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி  கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 12.10.2018 ம் தேதி மாலை 4.00 மணிக்கு போலீசார் ஆஜர் எதிரியை கைது செய்தபோது, எதிரி பழனிச்சாமியையும் கைது செய்தார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி சம்வத்திற்கு பயன்படுத்திய வாளை பழனிச்சாமி என்பவரின் வீட்டில் மறைத்து வைத்துள்ளார் என்று சொன்னார் என்றால் சரிதான். அதே வாளைக் கொண்டு தான் ஸ்டீபன் ராஜ் மற்றும் பரமசிவம் ஆகியோர்களை வெட்ட பயன்படுத்தியதாக கூறினார் என்றால் சரிதான். அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு ஆஜர் எதிரி பழனிச்சாமியையும், என்னையும் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு போலீசார் அழைத்து சென்றார்கள் என்றால் எனக்கு நியாபகமில்லை. எதிரி அவரது வீட்டிலிருந்து 89 செ.மீ நீளமுள்ள வாளை எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தார் என்றால் அது எனக்கு நியாபகமில்லை. ஆஜர் எதிரி எனது உறவினர் இல்லை. எதிரிகளை இந்த வழக்கில் இருந்த காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.